DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.148/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விஜயாதேவி | க-பெ | சுந்தரராஜ் |
| ஊர்: | : | கோட்டையூர் | | |
| வயது: | : | 72/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓய்வு பெற்ற ஆசிரியை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **05.01.2026**

**3 மற்றும் 4 ம் எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1) நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து வருகிறேன். ஆசிரியையாக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். கடந்த 03.05.2013 அன்று நான் காரைக்குடியில் உள்ள முனீஸ்வரன் கோவிலுக்கு சென்று விட்டு மதியம் 2.00-2.15 மணியளவில் ஔவையார் தெரு வழியாக உவேசா தெருவிற்கு செல்லும்போது குறிப்பாக ஔவையார் தெருவில் இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் வேகமாக வந்தார்கள் நான் அவர்கள் மோதி விடக்கூடாது என்பதற்காக சாலை ஓரமாக ஒதுங்கினேன். அப்போது அந்த வாகனத்தில் வந்த பின்னால் இருந்த நபர் எனது கழுத்தில் இருந்த 4 பவுன் செயினை அறுத்துவிட்டார். நான் கத்தினேன். மதிய நேரமாக இருந்தாலும் அங்கிருந்தவர்கள் வந்து பார்ப்பதற்குள் பிரதான சாலை வழியாக இருவரும் சென்றுவிட்டார்கள். பின்னர் நான் எனது கணவரிடம் சொல்லி காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை கூறி பள்ளத்தூர் காவல் நிலையத்தில் புகார் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அசாஆ 1**.

2) போலீசார் விசாரணைக்கு பின்னர் ஒரு மாதம் கழித்து மேற்படி செயினை கட்டியாக என்னிடம் கொடுத்தார்கள். அதே சமயத்தில் சிறைக்கு அழைத்து சென்று மேற்படி இரண்டு நபர்களை அடையாளம் காட்ட சொன்னார்கள். நானும் அவர்களிடம் அடையாளம் காட்டினேன். தற்போது அந்த இரண்டு நபர்களை பார்த்தால் அடையாளம் தெரியுமா என்றால் பல வருடங்கள்

ஆனதால் எனக்கு நினைவில் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க செயின் எனக்கு சொந்தமானது தான். மேற்படி **புகைப்படம் சா.பொ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

1) புகாரை எழுதியது யார் என்றால் நான் தான் எழுதினேன். புகாரில் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் இருசக்கர வாகனத்தின் அடையாளங்கள் மற்றும் பதிவெண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளின் அடையாளங்கள் மற்றும் குறிப்புகள் எதுவும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் செயினின் அடையாளங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சிறைச்சாலை சென்று அடையாளம் காட்டப்பட்டதாக சொல்லப்படும் நாள் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்திற்கு பிறகு எத்தனை நாட்கள் கழித்து அடையாளம் காட்டினேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சிறைச்சாலை சென்று எத்தனை நபர்களை அடையாளம் காட்டினேன் என்றால் இரண்டு நபர்களை காட்டினேன். ஒரு நபரை தான் அடையாளம் காட்டினேன் என்று சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான்.

2) அடையாளம் காட்டிய நபர்களின் பெயர் மற்றும் முகவரி எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபர்கள் இந்த வழக்கின் எத்தனையாவது எதிரி என்ற விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. முதல் விசாரணையில் திருடப்பட்ட செயினை நான் செயினாக பெற்று கொள்ளாமல் உருக்கிய தங்க கட்டியாகத்தான் பெற்று கொண்டேன் என்றால் சரிதான். என்னுடைய புகாரில் நான் என்னுடைய செயினை அறுத்து சென்றுவிட்டதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தற்போது அடையாளம் காட்டிய சா.பொ1 அறுத்த நிலையிலோ அல்லது உருக்கிய நிலையிலோ இல்லாமல் நல்ல நிலையில் தான் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் தவறான புகாரின் பேரில் போலீசார் அறிவுறுத்தலின் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.05 17:06:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.